
# பொன்மலர்



அமரர் பொன்னம்மா இரத்தினசோதி

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு

19.01.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் பொன்னம்மா இரத்தினசோதி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த


## "நினைவு மலர்"

**19.01.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்
இந்நாடே – அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே – அவர் சிந்தையில்
ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே...
எனும் பாரதியார் பாடலுக்கிணங்க வாழ்ந்த
மாமங்கைக்கு அர்ப்பணிக்கும் அன்பு மடல்
பொதுப்பணி, அன்பு, உறுதிமொழி, நம்பிக்கை,
திடம் கொடுத்து சுற்றத்தையும் உறவுகளையும்
நல்வழிப்படுத்தி இன்று இறைமடியில்
இளைப்பாறும் ஆத்மா நல்லபடியாக
சாந்தியடைய பிரார்த்தனைகள் பல



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் எம் மனங்களில் நிறைந்த
அன்புத் தெய்வம்



மலர்வு
14.03.1940

உதிர்வு
16.12.2023

அமரர்

# பொன்னம்மா இரத்தினசோதி

## திதி வெண்பா

நிகழும் சோபகிருது வருஷம் கார்த்திகை மாத
பூர்வபக்க வளர்பிறை சதுர்த்தி திதியதனில்
அன்னை பொன்னம்மா என்னும் உத்தமி
நண்ணியே நடேசனடி சென்றடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

**ஐ**ந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே !!

## தேவாரம்

**வே**யுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்,
கரையிலாக் கருணைமா கடலை,
மற்றவர் அறியா மாணிக்க மலையை,
மதிப்பவர் மனமணி விளக்கைச்,
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெ றாத அறிவுபெற் றேன் பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவமடைந்த பொன்னம்மா இரத்தினசோதி அவர்களுக்கு நற்கதி அருளுமாறு வழிபடு தெய்வங்களை வேண்டுதல்

## மாயக்கைப் பிள்ளையார் துதி

**க**ருணையினால் வழிபட்ட ஔவையாரைக்
கையிலைமலை மேலுய்த்த விக்கினேசா
பெருகிவரும் நஞ்சுண்ட பெருமான் தன்னைப்
பிந்தாமல் வலம்வந்து கனிகவர்ந்தாய்
பிரியமுடன் உன்னருளை பிரார்த்தித்தேத்தி
பிரிந்து சென்ற பொன்னம்மா அடியாள் தனை
உரிமையுடன் உன்னடியின் நிழலில் வைப்பாய்
உவப்புடனே மாயக்கை சீர் பிள்ளையாரே.

## பண்டாரி அம்மன் துதி

**வ**ந்தனை செய்தால் வரந்தரும்
வல்லமை கொண்ட தாயே
சிந்தனை செய்தால் மனத்துயரை
சீர்படுத்தும் சிங்காரத் தாயே
தம்பசெட்டியில் வந்திருந்து நல்ல வண்ணம்
மக்களைக் காத்திடும் பண்டாரி தாயே
உந்தனையே தேடிவரும் பொன்னம்மாவை
உன்னடியில் வைப்பாய் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்கலட்டி அம்மன் துதி

**ந**ற்கதி தந்திடும் நாவற்கலட்டியம்மா
நல்லருள் சொரிந்திடும் நாவற்கலட்டியம்மா
உற்றவரைக் காத்திடும் நாவற்கலட்டியம்மா
ஊருக்கு காவல் நீதானம்மா
குற்றமிலா பொன்னம்மா உன் அடியை
தேடி வந்தாள் காத்தருளம்மா
மற்றவர்களுக்குத் தீங்கு எண்ணா மலரவளை
உன் மலரடியில் வைப்பாய் அம்மா

## ஞான வைரவர் துதி

**அ**கந்தை தனை மேற்கொண்ட பிரமதேவன்
ஐந்து தலைகளிலொன்றைக் கிள்ளி மேலும்
சகமதனில் எல்லாரும் போற்றிசைப்ப
சங்கரன் கைக் கொண்டதொரு சூலந்தாங்கி
உகமுடிவில் எழுகின்ற தீயே போல
இங்கெலாக் கோயிலுள்ளும் இருந்து காவல் காப்பவனே
அகமுவந்து அடியாள் பொன்னம்மா தன்னை
ஆசகற்றி அடிகாட்டி ஆட்கொள்வாயே.

## மாலந்தெணி பிள்ளையார் துதி

**அ**ருள்தரும் மாலந்தெணி பிள்ளையார்
பாதம் பணிந்து
ஆரம்பமும் முடிவும் ஆற்றலும் ஆளுமையும்
திறமையும் துணிவும் சொல்லிலும் செயலிலும்
எங்கேயும் எக்கணமும் நம்முடன் இருந்து
நலம் தரும் நாயகனே விநாயகனே போற்றி
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலடிப்பிள்ளையார் துதி

**வ**ளம்தரும் ஆலடிப் பிள்ளையார் பாதம்
பணிந்துவர வாழ்வில் அதிசயங்கள் ஒவ்வொரு கணமும்
கணபதியான் துணையிருக்க வாழ்வு சிறக்கும்
அனுதினமும் நின் பாதம் பணிந்து
நின்னை மறவா மனம் கொண்டு
எள்ளிலும் இருட்டிலும் எதிர்கொண்ட
இன்னல்களிலும் ஆலடிக் கணபதியான்
துணையிருக்க நலமும் வளமும்
பலமும் சிறக்கும் இல்வாழ்க்கை
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## மாலந்தெணி முருகன் துதி

**த**ம்பசிட்டி பதியில்
எழில் பொங்க வீற்றிருக்கும்
புள்ளி மயிலோனே முருகனே, சரவணா,
நம்மனதோடு நிறைந்தவனே ஐயனே! ஆறுமுகனே!
அழகிய வேலோடும் தேரோடும்
உன்வீதியும் நம் கண்முன்னே காட்சிதரும்
தேவலோக தரிசனம் கண்டும் கேட்டும்
மெய்சிலிர்த்து நிற்கின்றோம்
நின்பாதமே சரணம் ஐயனே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத் தெய்வம் இரத்தினசோதி பொன்னம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறு

தமிழும் சைவமும், கமமும் புலமும் சிறந்திலங்கும் மேலைப்புலோலி தம்பசிட்டியில் விட்டுனு கலட்டி என பெயர் சுட்டி நிற்கும் வளவினிலே விளைந்தது மங்காப்புகழ் கொண்ட தங்கமும் பொன்னும், கணபதிப்பிள்ளை, பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்விகளென தங்கம்மாவும் பொன்னம்மாவும் தவழ்ந்தனர். விட்டுனு கலட்டியில் பொன்னம்மா பிறந்த நன்னாள் 14.03.1940.

பொன்னம்மாவின் ஆரம்ப கல்வி மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பமாகியது. கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, அதிபர் ஆசிரியர்களின் மனம் நிறைந்த மாணவியாக திகழ்ந்தார். வருடந்தோறும் நடைபெறும் பரிசளிப்பு விழாக்களில் பேச்சுக்களிலும் கலைகளிலும் பங்கேற்று பல பரிசில்களை தனதாக்கிக் கொண்டார்.

ஐந்தாம் வகுப்பு வரை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பொன்னெழுத்துக்களால் சுடர்விட்ட பொன்னம்மா ஆண்டு ஆறினை தொடர்வதற்கு யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் இணைந்தார். தந்தை கணபதிப்பிள்ளை தமிழும் சைவமும் தனது இரு கண்ணென போற்றுவர். வீட்டினில் தங்கம்மாவிற்கும் பொன்னமாவிற்கும் அடிக்கடி தமிழின் இனிமையையும் சைவத்தின் மேன்மையையும் எடுத்துக்கூறுவர். பாடசாலைக்குச் சென்று திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டால் வீட்டினில் வேலைகள் நிறைந்திருக்கும். தனியார் வகுப்புக்கள் என்று எதுவும் இல்லை. மாலை வேளைகளில் பால்தரும் பசுவுக்கு உணவாக பனை ஓலையை தந்தை, தாய், தங்கம்மா, பொன்னம்மா என எல்லோரும் ஓரிடத்தில் அமர்ந்து கிழிப்பார்கள். தந்தை கணபதிப்பிள்ளை தமிழின் மேன்மையினை , இனிமையினை, தொன்மையினை எடுத்துரைப்பார். இந்துசமய நெறிகளை விளங்கப்படுத்துவார். தங்கம்மாவும் பொன்னம்மாவும் தமக்கு விளங்காத விடயங்களை கேட்டு தெளிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்மாவின் ஆற்றல் கண்டு திண்ணைவேலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அவரை வரவேற்றது. ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் பயிற்சி நிறைவேறியது.

கொழும்பு கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியையாக 06.01.1964ல் நியமனம் பெற்று மூன்று வருடங்கள் பணி புரிந்தார். பின்பு யா/வட இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றலாகி வந்து ஓய்வூதியம் பெறும்வரை பணிபுரிந்தார்.

இல்லற வாழ்க்கையில் இவர் இணைந்த போது இரத்தினசோதி என்பவரை கரம்பற்றினார். ஆனால் குடத்துள் வைத்த குத்துவிளக்கென வாழ்க்கை ஒளிபெறவில்லை.

இவருடைய பொதுப்பணித்துறை ஆர்வத்தினால் சதாவதானி சனசமூக நிலையத்தில் செயற்குழு உறுப்பினர் பொறுப்பினை ஏற்று செய்த பணிகள் பொன்னெனப் போற்றப்படுகின்றது. திருவாசக முற்றோதல் மார்கழி மாதம் நடைபெறும் போது தினமும் அதில் பங்கு பற்றி உறுதுணையாக இருந்தார்.

காலங்கள் உருண்டோட நோய்க்கு விருந்தாகி மருந்தினாலும் மாற்ற முடியவில்லை. "மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைப் செய்ய" வீட்டிற்குள்ளேயே இரண்டு (2) வருடங்கள் வாழ்ந்து மறைந்தார். பொன்னம்மாக்கா என்று சமூகத்தால் அழைத்த பொன் அம்பலம் சேர்ந்தது.

பொன்னம்பலக் கூத்தனின் தாள்களில் எங்கள் பொன்னம்மா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக்கோயிலில் உறைந்திருப்பவர்

அன்புள்ள அக்காவே! எங்களின் உடன்பிறவா சகோதரியே! எங்கள் நினைவு தெரிந்த நாள் முதலாய் உங்களுடன் பழகியவை நீங்கா நினைவலைகளாகி விட்டன. உங்களின் கனிவுப் பார்வையும் கண்ணியமான பேச்சும் எங்கள் முன் வந்து வந்து போகுதே. என்னில், எம் குடும்பத்தினில் நீங்கள் வைத்த அன்பிற்கு ஓர் எல்லையுண்டோ. எங்களுக்காக நீங்கள் ஆற்றியதையெல்லாம் நெஞ்சம் மறக்குமோ, கடவுளாய் எண்ணி உங்களுக்காய்ப் பணி செய்தோம். எங்களின் தெய்வம் நீங்கள்.

ஓரட்டலில் உண்டோம். ஒன்றாய்க்கூடிக் கதைத்தோம். இன்ப துன்பங்களைப் பகிர்ந்தோம். சினமறியாத சிரித்த உங்கள் முகத்தைப் பார்த்தே பெருமை கொள்வோம். பெரியம்மா என்றழைக்கும் என் பிள்ளைகளின் பேச்சினிலே மெய் மறப்பீர்கள். பிரபா என்றும் யோகா என்றும் வாய் நிறைய அழைப்பீர்கள். மறுபிறப்பு உண்டேல் நீங்கள் என்னுடன்பிறக்க வேண்டும்.

"எத்தனை வருடம் வாழ்ந்தோமல்ல. எப்படி வாழ்ந்தோம்" என்பதையே கருத்தாகக் கொண்டு சிறப்புற வாழ்ந்தவர் நீங்கள். உங்களின் இறைபக்தியும் நேரிய சிந்தனையும் உங்களின் கற்றறிவை எடுத்துக் காட்டியவை. நல்லாசானாய் நின்று நல்மாணாக்கரை உருவாக்கினீர்கள். உற்றார், உறவினர், அயலவர், கற்றாரொடு நல் உறவை வளர்த்தீர்கள். எம் இனிய அக்காவே இறைபதமடைந்த உங்களை எந்நாளும் பிரார்த்திப்போம்.

**பிரிவுத்துயருடன்...**
**யோகா, பிரபா,**
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நினைவலைகளில் உணர்வுகளில் பொன்னம்மா அக்கா

இது பொன்னம்மாக்கா அவர்களின் நினைவு மலராக அமைந்தாலும் இத் தருணத்தில் பெரியம்மா, தங்கம்மாக்கா அவர்களையும் நினைவு கூறுவது சாலப்பொருந்தும் என எண்ணுகிறோம். எங்கள் அம்மா இராசம்மா அவர்களின் மூத்த சகோதரி பெரியம்மா பாறுபதிப்பிள்ளை, தங்கம்மா அக்கா அவர்கள் இருவரும் நீண்ட காலங்களின் முன்பு காலமாகி விட்டதாலும், தனித்து தவித்து நின்ற பொன்னம்மா அக்கா அவர்களினால் நினைவுமலர் வெளியிட முடியாமல் போய்விட்டது. அதனால் அவர்களை நினைவுகூர இது சிறந்த தருணமாகும். பெரியையா காலமாகியதும் பெரியம்மா தனது இரு பிள்ளைகளுடனும் தனித்து விடப்பட்ட நிலையில் அவர்களுக்கு சிறந்த கல்வியை, அறிவை ஊட்டி அவர்கள் இருவரையும் தமிழ்ப் பண்டிதர்களாக்கி, ஆசிரியர்களாக்கி பெருமை பெற்றார். அதேபோல் தனது வீட்டை ஒரு ஆரம்ப பாடசாலையாக்கிவிட்டார் என்றே கூற வேண்டும். எமது கிராமத்தில் மற்றும் அக்கம்பக்கம் உள்ள கிராமங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு எழுத்தறிவித்து ஆரம்ப கல்வியறிவை வளர்த்துவிட்ட பெருமை பொன்னம்மா அக்கா, தங்கம்மா அக்கா இருவரையுமே சேரும். அதற்காக முன்னின்று உழைத்த பெருமையும் பொறுமையும் எங்கள் பெரியம்மாவிற்கும் உரித்தாகும். அவர்களின் வீடு எப்போதும் குழந்தைகளின் கலகலப்புடனும் அவர்களின் பெற்றோர்களுடனும் இடம் முழுவதும் நிறைந்தே இருக்கும். அது மட்டுமல்ல, தங்கம்மா அக்காவிடம் பிள்ளைகள் அடிவாங்கி அழும் குரலுக்கும் குறைவில்லாமல் இருக்கும். மண்ணில் "அ , ஆ" எழுதி வாங்கிய அடிகள் எண்ணிலடங்காதவை. அவர்கள் போட்ட அத்திவாரம் எத்தனை எத்தனையோ. பல்லாயிரம் மாணவர்களை சிறந்த கல்விமான்களாகவும் பேரறிஞர்களாகவும் சகலதுறைகளிலும் உருவாக்கியுள்ளது என்று சொன்னால் மிகையாகாது. எங்களின் அம்மாவிற்கு பெரியம்மா என்றால் ஒரு பக்தி, பயம் எப்போதும் உண்டு. தங்கம்மா அக்காவிலும் அளவு கடந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். காரணம் குஞ்சியாச்சியின் பிள்ளைகளாகிய நாங்கள் எல்லோரும் படிப்பில் சிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கி சிறந்த எதிர்காலத்தை பெற வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டவராக இருந்தார். அதனால் தங்கம்மாக்கா, பொன்னம்மாக்கா இருவரும் எங்களை அடித்தால் என்ன, பேசினால் என்ன அவர்களுக்கு எதிராக ஒருபோதும் எதிர்த்துப் பேசியதில்லை. இன்று வெளிநாட்டில் வாழும் நாங்கள் அனைவரும் அவர்களின் வழிகாட்டலினால் அவர்களின் அறிவுரைகளினால் எங்களின் வாழ்வை வடிவமைக்கக்கூடியதையிட்டு நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

அது மட்டுமல்ல எங்கள் மூத்த சகோதரி "சுந்தரி" என எல்லோராலும் அழைக்கப்படுபவர் சிறுவயதில் பொன்னம்மாக்கா வீட்டில் இருந்துதான் படித்து வந்தார். அந்த நேரத்தில் எங்களின் அப்பா வேலை காரணமாக வெளியூரில் இருந்தபடியால் அம்மாவும் அப்பாவினுடனேயே இருக்க வேண்டியதால் இவர்களுடன் விட்டுத்தான் படிப்பித்தார்கள். பெரியையா, பெரியம்மா, தங்கமாக்கா, பொன்னமக்கா என எல்லோரும் அக்காவை மிகுந்த அக்கறையுடனும் அன்பாகவும் கவனித்து வந்தார்கள். நான்கைந்து வருடங்கள் அக்கா வீட்டில் தங்கி தனது ஆரம்பக்கல்வியை படிக்கத் தொடங்கியபடியால் சின்ன வயதில் எங்கள் அக்கா மிகுந்த கெட்டிக்காரியாக விளங்கினார். எல்லோரிடமும் பாசமாக பழகும் இயல்பையும் கொண்டிருந்தார்.

தமிழையும் சைவத்தையும் மற்றைய பாடங்களையும் போதித்து எங்களைப் பரீட்சைகளுக்குத் தயார்படுத்தி சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறவும் அவர்கள் பாடுபட்டார்கள். அது போல் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் நினைவுப் போட்டியில் எங்களையும் எங்கள் ஊர் மாணவர்களையும் பங்குபற்ற வைத்து, பரிசில்களை வென்ற நாட்களையும் இன்னும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். இன்னும் சைவ வினாவிடைப் போட்டிகளில் பங்குபற்ற வழிகாட்டியமை, பாடசாலைக் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்ற எங்களைத் தயார்படுத்தியமை என்று இன்னும் எத்தனையோ நினைவலைகள் எங்களின் எண்ணங்களில் கண் முன்னே வந்து செல்கின்றன.

பாடசாலை நாட்களில் பாடசாலை முடிந்து வீடு வரும்போது வீட்டில் எமக்கு பிடித்த உணவு இல்லை என்றால் ஓடிச்சென்று பெரியம்மா வீட்டில் அக்கா அவர்களுடன் சேர்ந்து அங்கு சாப்பிட்ட நாட்கள், அவர்களுடன் சேர்ந்து பக்தி படங்கள் பார்க்க சென்ற நாட்கள் எல்லாமே எங்களின் முன்னே நிழலாடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி காலங்களில் பொன்னம்மாக்கா அவர்கள் தனித்து வாழ்ந்தாலும் அக்காவை எங்களின் இளைய சகோதரி யோகா தாய் போல் கருதி பார்த்துக் கொண்டதும், அக்கா யோகாவை தனது மகளாக கருதி வாழ்ந்ததும் மற்றும் எங்களின் பெரியக்கா, யோகா எல்லோரும் சேர்ந்து அக்காவினை இறுதி காலங்களில் கவனித்து அவவிற்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து தங்களுடைய கடமைகளை திருப்பி செலுத்த ஆண்டவர் அருள் கிடைத்ததும் எங்கள் பாக்கியம். அந்தவகையில் இந்த தருணத்தில் அக்காவிற்கும் ஆண்டவனுக்கும் எங்களின் நன்றிகள் உரித்தாகட்டும். அதுபோல் 2015ம் ஆண்டு அம்மாவின் சுகயீனம் காரணமாக நாங்கள் அனைவரும் ஒன்றாக தாய்நாடு வந்தபொழுது சித்திரை புதுவருடத்திலன்று பொன்னம்மாக்கா வீட்டில் எல்லோரும் சேர்ந்து பொங்கி வருடப்பிறப்பை கொண்டாடி மகிழ்ந்தது அவவிற்கு அளவில்லா மகிழ்ச்சியை தந்ததாக கூறியது எங்களுக்கும் ஒரு மனத்திருப்தியை தந்தது. பெரு மகிழ்ச்சியுடன் இந்த தருணத்தில் அதை நினைத்துப் பார்க்கிறோம். இதுபோல் ஆயிரம் ஆயிரம் நினைவுகள் என்றும் எங்கள் மனங்களில் நிற்கும். அதுபோல் அவர்கள் ஊருக்கு குழந்தைகளுக்கு, சனசமூக நிலையத்திற்கு செய்த திருப்பணிகள் எல்லாம் ஊர்மக்களாலும் நினைவுகூரப்படும். என்றென்றும் ஊர்மக்கள் மனங்களிலும் எல்லோர் மனதிலும் நிலைத்திருக்கும். மேலும் பெரியம்மா, பொன்னம்மாக்கா, தங்கம்மாக்கா மூவரும் என்றும் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுடைய நினைவலைகள் என்றும் எங்களுடன் இருந்துகொண்டே இருக்கும். பொன்னம்மா அக்காவின் இறப்புடன் ஒரு அத்தியாயம் நிறைவு பெறுகின்றது. ஒரு பரம்பரை சரித்திரமாகின்றது. விழுதுகளற்ற பெருவிருட்சங்கள் இன்று சரிந்து விட்டன. ஆனால் குஞ்சியாச்சியின் பிள்ளைகள் நாங்கள் விழுதுகளாயிருந்து அவர்களின் பெருமையைக் காப்போம் என்று உறுதி கொள்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவார்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்புடன் சகோதரர்கள்**

**சுந்தரி, கண்ணன், ஜெயம், சந்திரன், தேவி, வரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையமும் அக்காவும்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று என்ற பொதுமறைக்கு ஏற்றவாறு மானிடவாழ்வில் ஏற்றம் கண்டார் பொன்னம்மாக்கா என அழைக்கப்படும் அமரர் பொ.இரத்தினசோதி. பள்ளிப் பருவத்தில் இருக்கும்போதே தமிழோடும் சைவத்தோடும் அதீத ஈடுபாட்டுடன் இருந்து வந்தார். அந்தக் காலத்திலேயே சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை அவர்களின் வரலாற்றை அதீத ஆர்வத்துடன் கற்றறிந்து கொண்டு சதாவதானியின் நினைவாக நிலையத்தில் நடாத்தப்படுகின்ற போட்டிகளிலும் குருபூசையிலும் அக்கறையுடன் கலந்துகொண்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றவர்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் தான் விரும்பியவாறே சைவம், மற்றும் தமிழ் ஆசிரியராக களம் கண்டார். 1970 காலப்பகுதியிலிருந்தே நிலையத்தோடு ஆயுட்கால உறுப்பினராக தன்னை முழுமையாக இணைத்து சதாவதானி குருபூசைப் போட்டிகளுக்கு நடுவராக தானும், ஏனைய நடுவர்களை ஒழுங்குபடுத்துபவராகவும் பேச்சுக்கள் மற்றும் பொதுஅறிவுகளை தயார்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களையும் நூல் விநியோகம் நிலைய பராமரிப்பு என்பவற்றிலும் தன்னுடைய பூரண பங்களிப்பினையும் வழங்கினார்.

குறிப்பாக நம்மூர் இளைஞர் யுவதிகளை ஒழுக்கசீலர்களாக சைவத்தமிழ் மரபிலும் தடம் மாறாமல் பயணிக்கக்கூடியவாறு மாற்றினார் என்றால் அது மிகையாகாது. அவர் அனைவரையும் அன்பாக அழைக்கின்ற விதத்தில் அவரின் அழைப்பிற்கு அடிபணியாத எவரும் இல்லை என்றே கூறலாம். அந்த அளவிற்கு இளையோரையும் அன்பாக அரவணைத்து புத்திமதிகூறி நன்மக்களாக வலம் வரச் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தின் பொன்விழா மலரிலும் தன்னுடைய ஆக்கத்தினை வெளிக்கொணர்ந்தது மட்டுமல்லாமல் மலர் ஆக்கக் குழுவிலும் முன்னின்று செயற்பட்டு பொன்விழா மலரினை எமக்கு அளிப்பதில் சிறப்பாக செயற்பட்டவர். நிலையத்தில் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொண்டு தன்னுடைய ஆலோசனைகளையும் வழங்கி திறமையான நிர்வாகத்திற்கு வழிவகுத்துக் கொடுத்தவர். அத்தோடு சதாவதானியின் வரலாற்றை ஆய்வு செய்ய பல விரிவுரையாளர்களுக்கு தகவல் வழங்குதல் அதிலும் எமதூர் உறவான வாழ்நாள் பேராசிரியர் திருமதி சண்முகதாஸ் அவர்களினுடைய சதாவதானி தொடர்பான வரலாற்றை எழுதுவதற்கு பெரும் உறுதுணையாக இருந்ததை நாம் இந்த இடத்தில் மறவோம்.

எமது மழலைச் செல்வங்களிற்கு உறுதியானகல்வி அத்திவாரத்தை இடும் நோக்குடன் சதாவதானி முன்பள்ளி மற்றும் சதாவதானி அறநெறிப் பாடசாலை என்பவற்றை உருவாக்கி அதன் மூலம் மாணாக்கர்களின் சரியான வளர்ச்சிப் பாதைக்கு உறுதுணையாக நின்றவர். அத்துடன் இறுதிவரை நிலையத்துடனும் ஊர் உறவுகளுடனும் நல்லுறவைப் பேணிய எங்கள் பொன்னம்மாக்காவின் இழப்பு எமது நிலையத்திற்கு மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பேரிழப்பாகும்.

பொன்னம்மாக்காவின் எண்ணத்தில் உதித்த தீராத வாஞ்சையான தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதுவும் பாதுகாப்பதுவும் எங்களின் தலையாய கடமையாகக் கொண்டு எமது நிலையமும் ஊர்மக்களும் பணியாற்றுவோம் என இந்தத் தருணத்தில் நாம் மீண்டும் உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.

நன்றி

**சதாவதானி**
**நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்**
**தம்பசிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி.க.கூ.சங்கத்தின் இரங்கல்செய்தி

# திருமதி பொன்னம்மா இரத்தினசோதி

## (அங்.இல 17)

திருமதி.பொன்னம்மா இரத்தினசோதி அவர்கள் எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரில் ஒருவர். அவரது அங்கத்துவ இல 17, சேர்ந்த திகதி 26.12.1985 நாம் இந்த சங்கத்தை ஆரம்பிக்கும் போது அவரும் முன்நின்று கிராம முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு இச்சங்கத்தை நிறுவுவதில் ஆர்வம் கொண்டு செயற்பட்டவரில் ஒருவராவார்.

எமது சங்கத்தின் 1996/1997ம் ஆண்டு காலப்பகுதிக்கு தலைவராக கடமையாற்றியுள்ளார். சங்கத்தின் வரலாற்றில் பெண் உறுப்பினர் ஒருவர் சங்கத் தலைமைப் பதவியை வகித்தது அங்கத்தவர்கள் அனைவருக்கும் குறிப்பாக பெண் அங்கத்தவர்கள் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

எமது சதாவதானி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தில் அறநெறிப் பாடசாலையொன்று திருமதி பொன்னம்மா இரத்தினசோதி அவர்களின் முகாமையில் இயங்கி வந்தது என்பதோடு அவரே பொறுப்பாசிரியையாகவும் கடமையாற்றி இருந்தார்.

சங்கத்தின் வெள்ளிவிழாவினை 2012ம் ஆண்டில் நாம் கொண்டாடியபோது வெள்ளிவிழா மலர் ஒன்று வெளியிட்டிருந்தோம். அந்த மலர் வெளியீட்டுக் குழுவில் திருமதி.பொன்னம்மா இரத்தினசோதி அவர்கள் உறுப்பினராக இருந்து மலர் சிறப்புற வெளிவர அரும்பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் இவ் அறநெறிப் பாடசாலை தொடர்பாக சங்கத்தின் வெள்ளிவிழா மலரில் கட்டுரையொன்றும் எழுதி இருந்தார். அக்கட்டுரையின் பிரதியொன்றும் இவரது இந்த அந்தியேட்டி நினைவு மலரில் இணைத்துள்ளோம். இக்கட்டுரையில் அவரது சமயப் பற்றின் ஆர்வத்தையும் அவரது எண்ணக்கருத்துக்களையும் அனைவரும் புரிந்து கொள்ளமுடியும் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியையாக பணிபுரிந்த இவர் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு வழிகாட்டியவர் மட்டுமன்றி சைவமும் தமிழும் வளர்வதை நோக்காகக் கொண்டு மாணவச் செல்வங்களை ஊக்குவித்த பெருந்தகை. தமிழ், சமயம் போன்ற பாடங்களை மாலைநேர வகுப்புக்களில் கிராம மாணவ மாணவியருக்கு இலவசமாக தனது வீட்டில் கற்பித்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவினார்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் பாலர்பாடசாலை ஒன்றினை 1972ம் ஆண்டளவில் ஆரம்பித்து நடாத்தி வந்தபோது இவரது சகோதரியான செல்வி.தங்கம்மா கணபதிப்பிள்ளை ஆசிரியையாக கடமையாற்றியது மட்டுமன்றி இவர்களது வீட்டிலேயே அந்தப் பாடசாலை பதினைந்து வருடங்களுக்கு மேல் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

புலோலி மேற்கு மாதர் முன்னேற்றச்சங்கத்தை அமைத்தபோது அச் சங்கத்தின் முதல் தலைவராக கடமையாற்றியவரும் அவரே என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது நற்பண்பு, கல்வி அறிவு, பிறருக்கு உதவும் தன்மை போன்ற இன்னோரன்ன விடயங்கள் இவரது சிறந்த அணிகலன்களாகும். இவரின் வெற்றிடத்தை வேறொருவராலும் நிரப்ப முடியாது என்று சொல்வதில் யாரும் குறை சொல்லமாட்டார்கள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு சங்க அங்கத்தவர்கள் அனைவரினதும் அஞ்சலியை காணிக்கை யாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**கந்தப்பு தங்கராசா**

**(தலைவர்)**

**சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கை மகள் தேவி பிரலாபம்

அக்கா !
நீங்கள் எனக்கு அக்கா இல்லை! இன்னுமோர் அம்மா !
நீங்கள் என் சொந்த அக்கா கூட இல்லை !
என்னைப் பெற்ற அம்மாவினுடைய அக்காவின் மகள்தான் நீங்கள் !
ஆனால் நீங்கள் என்னை வரித்துக் கொண்டதோ உங்கள் சொந்தமகளாக.

அக்கா !
நான் எதை எழுதுவது எதை விடுவது எனத் தடுமாறுகிறேன்..
அரிவரியில் இருந்து பத்தாம் வகுப்புவரை உங்கள் வீட்டில்தானே படித்துவந்தேன்.
எனக்கு மட்டுமா படிப்பித்தீர்கள்?.
ஊரில் உள்ள குழந்தைகள் எல்லோரையும்
அணைத்து பாடம் சொல்லித் தருவீர்களே.
உங்கள் வீட்டு முற்றத்து மல்லிகை பந்தலின் கீழ் இருந்து விளையாடியதையும், மாலை தொடுத்ததையும் மறக்க முடியுமா.

அக்கா !
சிறுமியான என்னை, தாய்ப்பறவை தன் சிறகினில் குஞ்சை பொத்திக் கொள்வதைப்போல், பாடசாலைக்கு கூட்டி சென்று வருவீர்களே.
அந்த நினைவுகளை மறக்க முடியுமா.

கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய விழாக்களில் எம்மைத் தயார்படுத்தி, பங்குபெறச் செய்து எமக்கெல்லாம் ஓர் அடையாளம் பெற்று தந்தீர்களே.
இவற்றைத்தான் மறக்க முடியுமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா !

உங்கள் நினைவுகள் என் விழிகளில் நீராய் வழிகிறதே.

உங்கள் கடைசிக்காலத்தில் ஒரு சில நாட்கள் உங்களோடு இருந்தது எனது பாக்கியமே.

நான் திரும்பி போகும் போது 'போய்ட்டு வாங்கோ' என்றீர்களே, நான் வருமுன் போய் விட்டீர்களே ஏனக்கா???

அக்கா !

சென்று வாருங்கள், எங்கள் வழியில் மீண்டும் ஒரு வாரிசாக.

உங்கள் ஆத்ம சாந்திக்கு சுவிஸில் இருந்த படி கண்ணீருடன் பிரார்த்திக்கிறாள் உங்கள் தங்கை, மகள் தேவி

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி பொன்னம்மா இரத்தினசோதி (ஓய்வுநிலை ஆசிரியர்)

# திருவாசக முற்றோதல் சபையினரின் இரங்கல் செய்தி

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லைக்கேடு."

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் திருமதி பொன்னம்மா இரத்தினசோதி அவர்கள் என்பது வெள்ளிடைமலை. இவ்வுலகில் தனக்கென வாழாப் பிறர்க்குரியராக விளங்குபவர்களே சமூகத்தில் உயர்ந்தோராகக் கருதப்படுகிறார்கள். அவ்வகையில் திருமதி இரத்தினசோதி அவர்களுக்கும் உயர்ந்த இடமுண்டு.

அவர் தம்பசிட்டி சி.க.கூ.சங்கத்தில் நடைபெறுகின்ற அறநெறிப் பாடசாலையில் ஆசிரியராக, அதிபராக இருந்து அறநெறியை வளர்த்து எடுப்பதில் முக்கிய பங்காற்றினார். மாணவர்கள் அறநெறியில் வாழவேண்டும் என்ற தன் இலட்சியத்தை சிறப்பாக எடுத்தியம்பினார். சதாவதானி கதிரவேற்பிள்ளையின் தடத்தில் தளரா சேவை செய்தார். தனது வாழ்க்கையை இறுதிக் காலத்தில் அறத்திற்காக அர்ப்பணித்து வாழ்ந்தார்.

பொதுப்போட்டிகளில் மாணவர்களின் பேச்சுத்திறன், மனனத்திறனை மேம்படுவதற்காக அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற சிறப்புப் பெற்ற திருவாசகத்தை மார்கழி மாதத்தில் அண்மித்த ஆலயங்களில் எல்லாம் முற்றோதல் செய்ய வேண்டும் என்ற செயற்பாட்டை தொடக்கி வைத்து காரணகர்த்தாவாக விளங்கினார்.

இவ்வகையில் அமரர் திருமதி இரத்தினசோதி அவர்களின் சேவையை எதிர்கால சமுதாயத்திற்கு அறியச்செய்வது ஒவ்வொருவரது பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் இன்னுரை தானே.

என்ற திருமூலரின் திருமந்திரக் கருத்துக்களை உள்வாங்கி அறச் சிந்தனைகளை அவர் வளர்த்தார் என்றால் மிகையாகாது.

எந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் போதும் நாம் அவரிடம் முதலில் செல்வோம். தனது பங்களிப்பையும் ஆலோசனையையும் வழங்கி ஊக்கப்படுத்தும் அன்னையைப் போன்ற ஒருவர் இன்று எம்மத்தியில் இல்லை என்பது வேதனையளிக்கிறது.

"விதி வலிதானது" என்று எம்மனதைத் தேற்றுவிப்பதோடு அவரது ஆத்மா இறையடி சேர இந்நினைவு மலரின் மூலம் திருவாசக முற்றோதல் சபையின் சார்பில் இறைவனை இறைஞ்சுவதோடு, குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிரிவுத்துயருடன்..**
**திருவாசக முற்றோதல் சபையினர்**
**தம்பசிட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr.செல்லத்துரை தேவகுமார் அவர்களின் இரங்கல் செய்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு வரைவிலக்கணமாய் வாழ்ந்து என்றும் எமக்கு வழிகாட்டியாய் இருக்கும் பொன்னம்மக்காவின் நினைவுகளில் சில துளிகள்.

'அக்கா' என்ற ஒற்றை சொல்லிற்கு சொந்தக்காரி. எழுபதுகளின் ஆரம்பத்தில் என்னை ஒத்த வயதினரின் கல்வி நடவடிக்கை தொடங்கிய இடம் அவரின் இல்லம். அந்த குருகுலம். ஆம் நாம் எல்லோரும் அவரின் தமக்கையார் பண்டிதர் தங்கம்மாக்காவிடம் அரிவரி தொடங்கியோர். இவர்களின் இல்லம் ஓர் குருகுலம். ஏனெனில் பகல் முழுவதும் அந்த இல்லம் மழலைகளின் ஒலியாலும் சேட்டைகளாலும் நிரம்பி இருக்கும். மாலையில் சிறுவர்களின் கற்பித்தல் வகுப்புகளில் களைகட்டும். இரவில்தான் அக்காவின் ஆட்சி. இங்கு தரம் 6 லிருந்து தரம் 10 வரை மாணவர்கள் இருப்பார்கள். பாடசாலை படிப்பு ஒவ்வொரு வகுப்பினரின் தேவைக்கேற்ப வேறுபடும். ஆனால் கம்பனை பாரதியை இளங்கோவை வள்ளுவனை நாவலரை நம்மூர் கதிரவேற்பிள்ளையை இன்னும் பலரைப்பற்றிய அறிவு விருத்தியானது எல்லோருக்கும் ஒன்றுதான். இதை தவிர சமகால இலக்கியவாதிகளான கல்கி, சாண்டில்யன், பார்த்தசாரதி போன்ற பலரைப்பற்றிய அவர்களின் படைப்புகள் பற்றிய தேடல்களும் விரியும்.

கதிரைவேற்பிள்ளை விழாவிற்கான பேச்சு, மனனம், பண்ணிசை போன்ற போட்டிகளுக்கான பட்டறை இங்குதான் ஆரம்பம். 'வெற்றி தோல்வி முக்கியமல்ல, பங்குபற்றுதல்தான் குறிக்கோள்' என்றது அக்காவின் தாரக மந்திரம். இந்த செப்பனிடல்தான் இன்று எம்மை இந்த உயர்நிலைக்கு உந்தி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழையும் சைவத்தையும் வளர்ப்பது, தன்னாலானவரை அதை மற்றவர்களுக்கு பகிர்வது என்ற உன்னத கொள்கையை கடைசி வரை தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தவர். இங்கு கல்வி பயின்ற மாணவர்களுக்கு கற்பித்தலை எந்தவித வருமானமற்ற ஒரு கல்விச்சேவையாகவே பெரும்பாலும் செய்து வந்தார்.

கம்பராமாயணத்தை பாரதசுருக்கத்தை அவர் வாயால் கேட்பது ஒரு தனி அழகு. மிடுக்கான நடை, நேர்கொண்ட பார்வை, கனிவான பேச்சு இவை அக்காவின் பிரிக்க முடியாத குணங்கள். ஆனால், அண்மைக்காலமாக அவரின் பொலிவிழந்த தேகம், களையிழந்த கண்கள், பேதலித்த புத்தியை காண என் மனம் பொறுக்கவில்லை. ஒரு மருத்துவராக தினமும் இவ்வாறான பிரச்சனைகளுடைய நோயாளர்களுக்கு அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கும் ஒருவனாக இருந்தும் இந்த ஆளுமையின் இந்த தோற்றத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. நான் கடவுளிடம் வேண்டியதுண்டு. அக்காவை அவரிடம் சீக்கிரம் அழைத்து ஐக்கியமாக்கி கொள்ள வேண்டுமென்று. இன்று அவர் பிறப்பற்ற மோட்சத்திற்கு சென்று விட்டார். உலகம் முழுதும் பரந்து இருக்கும் அவரின் குழந்தைகளுக்கு அவர் ஒளியாகவும் வழிகாட்டியாகவும் என்றென்றும் திகழ்வார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தம்பி, மாணவன்
**Dr.செல்லத்துரை தேவகுமார்**
**(விஷேட மயக்கவியல் வைத்திய நிபுணர்.
போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரைசிங்கம் (லயன்) அவர்களின் இரங்கல் செய்தி

அனைவரினதும் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய "பொன்னம்மா அக்கா" சிவபதமடைந்தமை கிராமத்தினைப் பொறுத்தவரையில் பேரிழப்பாகும். கிராமத்தின் இரண்டு கண்களெனக் கருதப்படும் சதாவதானி கதிரவேற்பிள்ளை பெருமகனாரின் திருநாமங்களைக் கொண்ட சனசமூக நிலையம் மற்றும் சி.க.கூ.சங்கம் இரண்டினதும் செயற்பாடுகளில் அன்னாரின் பங்களிப்பு அளப்பரியது என்றால் மிகையாகாது. அத்துடன் கிராம மாணவர்களின் கல்விச் சிறப்பிற்கும் தன்னாலான பங்காற்றியமை நினைவுகூரத்தக்கது. சனசமூக நிலையத்தின் எல்லாவிதமான செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பினை மனப்பூர்வமாக நல்கியவர்.

1991ம் ஆண்டு நிலையத்திற்கான புதிய காணிக் கொள்வனவின் போதும் 1992ம் ஆண்டு புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணியில் சதாவதானி பெருமகனாரின் நினைவு விழா முதன்முதலில் நடைபெற்ற போதும் செயற்குழுவில் இயங்கிய எமக்கு ஆலோசனைகள் வழங்கியமை என்றும் நினைவுகூரத்தக்கவை.

அன்னார் சி.க.கூ.சங்கத்தின் தலைவியாகவும், செயற்குழு உறுப்பினராகவும் நீண்ட காலம் சிறந்த முறையில் செயற்பட்டு எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தமை மிகவும் பாராட்டத்தக்கது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

**லயன் அம்பலவாணர் துரைசிங்கம்**

**நிலைய தொண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி பொன்னம்மா இரத்தினசோதி

- ⇨ யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகவும் , சைவநெறி ஆசிரியராகவும் கடமையாற்றியவர்.
- ⇨ தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களின்நிலை அறிந்து பல பயிற்சிகள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார்.
- ⇨ பாடசாலையின் சைவசமய விழாக்களை திறம்பட நடாத்தி மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கியவர். குறிப்பாக தைப்பொங்கல் நிகழ்வுகளிலும், ஆடிப்பிறப்பு, நவராத்திரி போன்றவற்றையும் சிறப்பாக நடாத்தி வைப்பார்.
- ⇨ மாணவிகளின் ஒழுக்கம், கலை உணர்வு என்பவற்றை மேம்படுத்துவதற்காக அரும்பாடுபட்டவர். நாடகக் கலையை பயிற்றுவிப்பதிலும், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்வை நடாத்துவதிலும் தேர்ச்சி பெற்றவர்.
- ⇨ கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு மேலாக யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்றியவர்.
- ⇨ தம்பசிட்டி கிராமத்தில் ஓர் அறநெறிப் பாடசாலையை நிறுவி அதற்கு சதாவதானி அறநெறிப் பாடசாலை என பெயரிட்டு மாணவர்களுக்கு சமய அறிவினை புகட்ட ஆவல் கொண்டவர் எனக் கூறுவதில் பெருமைப் படுகின்றோம்.
- ⇨ சதாவதானி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவராகவும் நிர்வாக வேலைகளில் வல்லவராகவும் மிளிர்ந்தார்.
- ⇨ சதாவதானி நூல் நிலையத்தில் சிறந்த போதகராகவும் திகழ்ந்தார்.

**சதாவதானி அறநெறிப் பாடசாலை**
**தம்பசிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிசெட்டியின் தனித்துவமான தமிழ்த்தாய்

**70**களில் இருந்து எங்களை தமிழ்மொழி மீதும், சைவ சமயத்தின் மீதும், பற்றுள்ள ஒரு சந்ததியாக உருவாக அடிநாதமாக இருந்து வழி நடத்திய பேராசான் பொன்னம்மா டீச்சர்.

ஆனால் நாங்கள் இவரை டீச்சர் என்று அழைத்ததில்லை. பொன்னம்மாக்கா என்றுதான் அழைத்துக் கொள்வோம். இவரின் சகோதரி அமரர் தங்கமாக்கா, தங்கமாக்காவுடன் அரிவரி தொடக்கம் ஆரம்பக் கல்வியைப் பயின்ற நாங்கள் பாடத்திட்டங்கள் என்ற வரையறைக்கு அப்பால் தமிழின் பல்வேறு தரநிலைத்தளங்களிலும் எங்களைப் பயிற்றுவித்து பயணிக்க வைத்தவர் பொன்னம்மாக்கா அவர்களே.

எமது ஊரின் கலங்கரை விளக்கம் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், இந்நிலையத்தில், சிறுவர் பராயத்திற்கும் பொருத்தமான செயற்பாடுகளான, நூல் விநியோக பரிமாற்றம் புத்தங்களுக்கு உறைகள் போடுதல், போன்ற நூலக செயற்பாடுகளுடன் எங்களை இணைய வைத்து இந்த நூலகத்துடன் இணைந்து பயணிக்கக்கூடிய பக்குவத்தை உருவாக்கியவர்.

அன்றாட வாழ்வியலில், எமது சமூகத்தில், பெண்கள் சனசமூக நிலையங்களில் பங்களிப்பு செய்ய முன் வருதல் என்பது மிகவும் அரிதாகவே இருந்தது.

ஆனால் அன்றைய காலப்பகுதியில் கல்விபயின்று கொண்டிருந்த எங்களது சகமாணவிகளையும் இந்த சனசமூக நிலைய செயற்பாட்டில் ஆண்களுக்கு நிகராக செயற்பட வைத்து அன்றைய காலப்பகுதிகளிலேயே பெண்ணியம் சார்ந்த முன்னோக்கிய சிந்தனைகளை கொண்டிருந்த ஆசிரியராக செயற்பட்டமையை இன்றும் பெருமையாக மீட்டிப் பார்க்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலகத்தின் சிறப்புமிக்க ஒரு பகுதியான, சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்கள் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற திருக்குறள் மனனபோட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி, பொது அறிவு போட்டி போன்ற பல்வேறு தமிழ்த்துறை தளங்களில் எங்களைப் பயிற்றுவித்து பல்வேறு ஊர்களில் இருந்தும் பங்குபற்றும் போட்டியாளர்களுடன், சமநிகராக அல்லது அதற்கு மேலாக பிரகாசித்திட, எங்களை துணை நின்று வழி நடத்தியவர்.

உங்களால் வழி நடத்தப்பட்ட நாங்கள் உங்களால் பெருமை கொள்ளக்கூடிய அளவில் நாங்கள் ஏதோ ஒரு துறையில் இருந்து கொண்டிருப்பதை பொது நிகழ்வுகள் பலவற்றில் நீங்கள் பெருமிதமாக மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டதை நாங்கள் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷப்பட்டிருந்திருக்கின்றோம். இத்துடன் மட்டுமன்றி அன்றைய கால பகுதிகளில் எமக்கு தெரிந்த வகையில் எந்தவித கட்டணமும் இன்றி மாணவர்களுக்கு கல்வி புகட்டிய ஒரு மகத்தான மானிடப் பண்பையும் இவரிடம் எம்மால் உணர முடிந்திருந்தது.

இவ்வாறு எங்களை ஒரு குருகுலக்கல்வி நிலையிலிருந்து எமது கிராமத்திலும், அதற்கு வெளியேயும், குறிப்பிடத்தக்க ஓர் நிலையை, நாங்கள் அடையக்கூடிய அடிப்படையான சகல விடயங்களிலும், எங்களை வழி நடத்தியது பொன்னம்மாக்கா...

என்றும் எங்கள் மனங்களில் இருந்து, நீங்க முடியாத நீக்கமற்ற ஒரு தெய்வப் பிறவியாக... எங்களுடன் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றுமே உங்கள் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற**
**உங்கள் மாணவர்கள்**

**தேவன்** (இலங்கை), **சுசிலா** (பிரான்ஸ்),
**ஸ்ரீ** (பிரான்ஸ்), **தேவி** (சுவிஸ்),
**வாசன்** (இங்கிலாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாயின் அகவொளி வீசிய அகல்விளக்கு

தமிழ் ஆசிரியையான திருமதி பொன்னம்மா இரத்தினசோதியை 1990ம் ஆண்டிலிருந்து நீண்ட காலமாக 33 ஆண்டுகளாக நன்கறிவேன். வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியையாக இருந்தபோது என்னை அப்பாடசாலைக்கு மாணவியாக வரவழைத்து என்னுள் உடனின்ற தமிழ் பற்றையும் திறனையும் இனங்கண்டு அறிவுத் தேடலுக்கான அகல்விளக்காக ஒளிர்ந்தவர்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தால் நடாத்தப்படும் போட்டிகளில் ஈடுபடசெய்து மாணவர்களை நன்னெறிப் படுத்தினார். 1995ம் ஆண்டு வலிகாமம் மற்றும் யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி பகுதியிலும் தங்கினர். ஆசிரியையின் வீட்டில் ஒரு குடும்பத்தினர் அடைக்கலம் பெற்றனர். அன்பாக அரவணைத்துக் கொண்டார். பாடசாலையோ வேறு தனியார் வகுப்புக்களோ நடைபெறாத அன்றைய காலத்தில் தனது வீட்டில் அயல் மாணவர்களை அழைத்து, அறநூல்களை மனனம் செய்வித்து விளக்கம் அளிப்பார். பண்டிதமணி கணபதிப்பிள்ளையிடமும், பண்டிதர் கந்தமுருகேசனாரிடமும் தமிழ் கற்ற பெருமையை எமக்குள் விதைத்தார். எனக்குள் எப்போதும் ஒளிரும் அறத்தையும் மனனம் செய்யும் திறத்தையும் பெற்றுச் சிறந்தது அப்போதே.

அவரிடம் கற்ற ஔவையின் அருள்மொழிகள் , திருக்குறள், நன்னெறி, வெற்றிவேட்கை, கந்தபுராணம், கம்பராமாயணம் எல்லாமும் உதிரத்துடன் கலந்து உவகை அளிக்கின்றது. வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆசிரிய பணியினின்று அவர் ஓய்வு பெற்றாலும் எனக்கும் அவருக்குமான உறவு இறுக்கமாகி இருந்தது. பாடசாலைகளில் மாணவிகளை வன்சொல்லாலோ, பிரம்பாலோ கண்டிக்காது பண்புறு வார்த்தைகளாலும் வாழ்வியல் முறைகளாலும் சீர்திருத்திய மாதரசி பொன்னம்மா ஆசிரியை.

நாட்டு நடப்பை பேணுவதற்கும் , தமிழ் எனும் தாய்மொழி தொடர்பாக ஏற்றமுறு எண்ணங்களையும், ஏமாற்றங்களையும், எழுத்துக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றையும் பேசி மகிழ்ந்து நாம் மனதால் மேம்பட்டோம். என்னுடைய கல்வி உலகின் ஏற்றம் கண்டு மனம் நெகிழ்ந்து மகிழ்ச்சி கொண்டார். எனது குடும்ப நிகழ்வுகளிலும் பங்கு கொண்டார். என் தாயையும் தாயின் தாயாரையும் நன்கறிந்த தாயிற் சிறந்த தயவுடையவர். நான்காம் தலைமுறையாக என் மகளிற்கு ஏட்டை எடுத்து, கையில் கொடுத்து அவரது வீட்டிலேயே ஏடு தொடக்கும் அரும்பேறு கிடைத்தது நான் செய்த தவப்பயனே!

பெண்கள் தலைவிரி கோலமாக திரிவதையும் கண்ணியமற்ற ஆடைகளை அணிவதையும் விரும்பாதவர். தனது நடை உடை பாவனைகளில் எளிமையையும் சைவப் பண்பாட்டையும் எடுத்தியம்பியவர். உணவிலும் சைவமாகவே இருந்தவர். சைவமும் தமிழும் பிரிக்க முடியாத இரட்டையர் என்பதால் சமய நம்பிக்கையுடன் சீர்பெறு சமய வாழ்வை வாழ்ந்தவர். திருவாசக முற்றோதலில் முன்னின்றவர். மூட நம்பிக்கைகளை புறந்தள்ளியவர்.

2023 தமிழ் மாதம் மார்கழி முதலாம் நாள் சொர்க்க வாசல் திறக்கட்டும் என காத்திருந்து திறந்த கதவினூடே சென்று விட்டார். அவரது குரலை இனிக் கேட்க முடியாது. அறிவுரைகளை செவிமடுக்க முடியாது. அறிவுசால் எண்ணங்களைப் பகிர முடியாது. ஆயினும் எமக்குள் அவர் விட்டுச்சென்ற அறிவொளி சுடர்விட்டு பிரகாசிக்கும். அகல் விளக்கு ஒளிரும். அதற்கு அழிவில்லை. நினைவுகள் முன்னிரவின் முற்றத்து மல்லிகையாக மணம்பரப்பி நிற்க மனது கனத்து நினைவுகளுள் மூழ்கின்றது.

**உமா தங்கவேல் (சட்டத்தரணி)**
**மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணசபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னனைய தாயே!

வடமராட்சி வடக்கில் தம்பசிட்டி என்னும் கிராமத்தில் திரு கணபதிப்பிள்ளை , திருமதி பாறுபதிப்பிள்ளை தம்பதியினருக்கு பிறந்தவர்களான தங்கம்மா, பொன்னம்மா என்னும் இரு சகோதரிகளும் ஒத்த கருத்துள்ள இரு முத்துக்களாக அவதரித்து தகப்பனது மொழியறிவினால் வழிகாட்டப்பட்டு ஒற்றுமையாக வாழ்ந்தனர். தந்தை விவசாயத்துறையில் ஈடுபட்டாலும், கல்வியறிவு மொழியடிப்படையில் அவரை ஓர் அறிவாளியாக காட்டியது.

உலகின் பல பாகங்களிலும் பலவித கலைகள், ஆய்வுகள், வேறுபட்ட வாழ்க்கை முறைகள், வேறுபட்ட தோற்றத்தினர் உட்பட பலவித விடயங்களை காண்பதுவும் எம்மை சிறந்த அம்சங்களை காண்பதற்கு நகர்த்துவதும், பொதுவான விடயங்களாக உள்ளன. மனிதன் பலவித கலைகளைக் கற்றாலும் மொழியே அவனுக்கும் அவனது வாரிசுகளுக்கும் வழிகாட்டுவதாகும். எனவே அத்துறையில் ஆய்வுகளும், அதற்குரிய பாண்டித்தியமும் வரவேற்கப்படுகின்றன. "மொழியின்றேல் கலை வளர வழியில்லை". உலகின் எத்துறை வளர்ச்சிக்கும் மொழியே உந்து சக்தியாக, வழிகாட்டியாக அமைந்துள்ளது.

மொழியின் அவசியத்தை உணர்ந்து தம்மை மொழிக்கல்வி வளர்ச்சியில் பங்குகொள்ள வைப்பவர்கள் ஒரு பகுதியினர் உள்ளனர். அவ்வழியினரில் ஒரு பங்குதாரரே எங்கள் பொன்னம்மா ஆசிரியையும் சகோதரியும் அவர்களின் மொழிப் பற்றுக்கு அத்திவாரமிட்ட தந்தையும் ஆவர். அக்காலம் புலோலியின் முக்கிய பகுதியில் வாழ்ந்த புகழ்பெற்ற ஆசான் பண்டிதர் கந்தமுருகேசனாரிடம் காலைநேரம் சென்று மதியம் ஆகும் போது நடையிலே வீடு திரும்பி வந்த மன உறுதியும், மொழி ஆர்வமும் மூத்த சகோதரி தங்கம்மா அவர்களுடன் சிவநேசம் கந்தசாமி அவர்களினதும் செயற்பாடுகள் மூலம் பாராட்டவும் மதிக்கவும் தக்கதாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழியில் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியையாக விரும்பி பொன்னம்மா ஆசிரியை பயிற்சிக் கலாசாலையில் கற்று சித்தியடைந்து, அரசாங்க ஆசிரியையாக நியமனமும் பெற்றார். கல்வி கற்று ஆசிரியையானாலும் எப்போதும் கற்றுக்கொண்டே இருப்பவராக ஆசிரியை பொன்னம்மா தனது மொழியறிவை விருத்தி செய்ததுடன். தமிழ் கற்றோர், கற்பிப்போர் ஆய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணி தனது தமிழறிவை விருத்தி செய்து கொண்டார். தன்னறிவு உள்ளவரை கற்பதையே தொழிலாக்கி, கற்றுக் கொண்டிருப்பார். ஓய்வு பெற்றது தொழிலில் மட்டுமே. படிப்பதில் ஓய்வு கிடைக்கவில்லை.

"கல்வி கரையில் கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கின் பிணிபல"

தனது இறுதிக்காலத்தில் எதையும் ஞாபகத்தில் கொண்டிராத கொடிய நோய்க்கு ஆளாகினார். அதன் விளைவாக இப்பூமியில் வாழமுடியாத நிலைக்கு ஆளாகினார். எனினும் அவரை உறவினர் யாவரும் கவனித்து பாதுகாத்தனர். ஆனாலும் வயதுக்கும் நோய்க்கும் வரம்பு கட்டமுடியாது, இவ்வுலகை விட்டு நீத்தார். மிகத்துன்பம் என்று சொல்லிவிட்டு இருக்க முடியுமா?

**செல்வி வ. ஆறுமுகம்**
**ஓய்வுபெற்ற ஆசிரியை**
**மல்லிகை கலட்டி – தம்பசிட்டி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னம்மா ரீச்சரின் வாழ்வை மீட்டிப் பார்க்கும் சில நினைவுகள்....

திருமதி.இரத்தினசோதி ஆசிரியர் அவர்கள் எமது குடும்பத்துடன் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஒரு குடும்ப அங்கத்தவர் போல அன்புடனும் பாசத்துடனும் பழகி வந்தவர். 1970ம் ஆண்டு அவர் வட இந்து மகளிர் கல்லூரிக்கு ஆசிரியராக இணைந்த நாள் தொட்டு அவரது மறைவு வரை அவரும் நாமும் தொடர்பில் இருந்தோம். இலங்கை வரும் போதெல்லாம் அவரிடம் சென்று வந்தோம். நாம் ஊரில் உள்ளவரை எமது குடும்பத்தில் நடந்த சகல நன்மை தீமைகளிலும் தவறாது கலந்து கொள்வார். ஆசிரியர் அவர்கள் எமது குடும்பத்தின் மீது அதீத அக்கறையும் பாசமும் கொண்டிருந்தார். அன்னார் எமக்குச் செய்த உதவிகள் அளப்பெரியன. எம்மில் உள்ள அக்கறை காரணமாக எம்மை அவரது வீட்டுக்கும் அழைத்து பாடல்கள் சொல்லித்தருவார். எந்தக் கட்டணமும் அறவிடுவதில்லை. ஆசிரியரும் அவரது தாயாரும் எம்மை உபசரிக்கும் பாங்கு வார்த்தைகளால் விபரிக்க முடியாது. எம்மைக் கண்டவுடன் உடன் கறந்த பசும்பாலை நன்றாகக் காய்ச்சி சுடச்சுட பருகும்படி தருவார்கள். அத்தோடு பால், தயிர் என அடிக்கடி வீட்டுக்கும் அனுப்பி வைப்பார்கள்.

ஆசிரியர் அவர்களது வீடு எப்போதும் ஊர்ப் பிள்ளைகளால் நிறைந்திருக்கும். ஊர் மக்களால் பொன்னம்மா ரீச்சர் என அன்பாக அழைக்கப்பட்டார். சைவ நெறிமுறைப்படி வாழ்ந்த இறைபக்தி கொண்ட ஒரு பெண்மணி. அவரது வேகநடையும் உற்சாகமும் மாணவர்கள் மீது காட்டும் தனிப்பட்ட அக்கறையும் யாவரும் அறிந்ததே. வாழ்வில் எதிர்கொண்ட துன்பங்களையும், இன்னல்களையும் நெஞ்சுறுதியுடன் எதிர்கொண்ட உறுதியான உள்ளம் கொண்ட ஓர் ஆளுமை தான் எமது ஆசிரியர்.

தமிழில் மிக்க ஆழ்ந்த புலமை கொண்ட ஆசிரியர் அவர்கள் ஓர் தமிழ் பண்டிதர் பட்டம் பெற்ற பெண்மணி என்பது பலரும் அறியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது உற்றார் உறவினர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். ஓர் நிறைவான வாழ்வை முடித்து எம்மை பிரிந்த ஆசிரியர் அவர்களின் பேராத்மா இறைவன் திருவடியில் இளைப்பாறப் பிரார்த்திப்போமாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

**திருமதி கணபதிப்பிள்ளை ஆசிரியர்,**
**பிள்ளைகள் (இலண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னம்மா ரீச்சர் ஒரு சகாப்தம்

**மே**லைப்புலோலி மண்ணில் வந்துதித்த பெருமகளே. காலைக்கதிரவன் போல் அறிவொளியாம் திருமகளே. நல்ல தமிழ்தந்தாய், நானிலம் போற்ற வாழ்ந்தாய். நீங்கள் சொல்லித்தந்த தமிழால் வல்லமை பெற்று வாழ்கின்றோம்.

பொன்னம்மா ரீச்சர் புலோலி மண்ணின் பெருவிருட்சம் எனலாம். பெண் என்று ஒதுங்கி வாழாமல் தன் கல்வியில் அக்கறை கொண்டு கற்றுத் தேர்ந்தார். அரச கல்லூரியில் ஆசானாக பணிபுரிந்து கொண்டே தான் வாழ்ந்த சமுதாய மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அயராது பாடுபட்டார். முக்கியமாக பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் சமூக நீரோட்டத்தில் ஈடுபாடாக செயற்படவும் ஆவன செய்தார்.

உள்ளூரில் இயங்கும் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய வளர்ச்சிப் பணியிலும் அதீத அக்கறை எடுத்துக்கொண்டதுடன் அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்.

பின் நாட்களில் அமரர் கனகம்மா ஆசிரியையுடன் இணைந்து மாதர்களையும் வாசிகசாலை நிர்வாகத்தில் இடம்பெறச் செய்து நிலைய அபிவிருத்திக்கு உறுதுணையாக இருந்தார்.

நாம் ஒவ்வொரு தடவையும் அவரை சந்திக்கின்ற வேளையிலும் தான் வாழ்ந்த சமுதாயத்தின் வளர்ச்சிபற்றியும் , கல்வி மேம்பாட்டைப் பற்றியுமே பெரும்பாலும் பேச்சு அமையும். அவர் தான் வாழ்ந்த சமுதாயத்தை எந்த அளவு நேசித்தார் என்பதை எண்ணி வியந்து போனேன். கல்வி அறிவின் மூலமே ஒரு சமுதாயம் உன்னத நிலையை அடையலாம் என திடமாக நம்பினார்.

**திரு. திருமதி. பவானிசங்கர்**
**(ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பால் நிறைந்தவருக்கு சில வரிகள்

ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணம் எனும் பேரூரில் வடமராட்சி எனும் பதி அமைந்துள்ளது. அங்கு சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்க செய்த பெரும் மக்கள் வாழ்ந்த பூமியிது. சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை எனும் பெருமகனார் அவதரித்த இப் பெரும் பதியான தம்பசிட்டி எனும் புண்ணிய பூமியில் அவதரித்தவர் தான் திருமதி பொன்னம்மா இரத்தினசோதி.

சிறுவயதினிலே கல்வி கேள்விகளில் சிறந்தோங்கியவராக காணப்பட்டார். அதன் பயனாக ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்து அத்தொழிலை நேசித்து பணி ஆற்றி நிறைவும் பெற்றார். ஊரிலுள்ளவர்கள் அனைவரும் அவரை பொன்னம்மா ரீச்சர் என செல்லமாக அழைப்பதும் உண்டு. இவ்வாறே நாட்கள் செல்ல செல்ல அவர் தமது ஆசிரியப் பணியின் ஓய்வு காலங்களில் சமய, சமூக பணிகளில் ஈடுபடலாயினர். மார்கழி மாதம் பிறந்தால் பெருமாட்டிக்கு கொண்டாட்டம் தான். அதிகாலையிலேயே ஆலயங்கள் தோறும் சென்று திருவெம்பாவை முற்றோதுதல் நிகழ்வினை மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் செய்து முடிப்பதில் அவருக்கு நிகர் அவரே. அவர் இறைவனிடம் சென்ற காலமும் மார்கழியே.

சில காலங்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார். முல்லைக்கு தேர் கொடுத்த பாரி மன்னன் போல தம்பசிட்டியில் யோகா–பிரபா அவர்களின் உதவி அவருக்கு கிடைத்தது. சொந்த பிள்ளைகள் பராமரிப்பதை விட பலமடங்கு மேலாக இப் பெருமாட்டியை யோகா அவர்கள்மிகவும் அன்போடும் அக்கறையோடும் விருப்போடும் தனது சொந்த தாயாரை கவனிப்பது போல கவனித்து வந்தார். யோகா அவர்களின் கனிவான பராமரிப்பாலும் சிறப்பான விருந்தோம்பலாலும் அதாவது அவர் விரும்பி கேட்ட உணவுகளை செய்து கொடுத்து அவரை மனங்குளிர கவனித்து வந்தார். கடைசி காலத்தில் பெருமாட்டி நிம்மதியாக வாழ்ந்து வந்தார். தான், வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்வினால் ஏற்படும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தேன் என்பதனையே மறந்த நிலையில் தனது வாழ்க்கையை ஓட்டிச் சென்றார். பிரபா யோகாவின் பிள்ளைகளை தனது சொந்தப் பிள்ளைகளாக நினைத்து அன்பினை பொழிந்து வந்துள்ளார்.

இவ்வுலகில் பிறந்தவர்கள் அனைவரும் என்றோ ஒருநாள் இறப்பது என்பது கடவுளின் கட்டளையாகும். எனவே அதற்கேற்ப அவர் நல்வாழ்க்கை வாழ்ந்து இறுதிக் காலங்களிலும் நிம்மதியாக இருந்து 16.12.2023 திகதி கார்த்திகை வளர்பிறை சதுர்த்தி திதியில் இவ்வுலகை நீத்துள்ளார். அவரது ஆன்மா மிகவும் அமைதியான முறையில் இளைப்பாற எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டி நிற்கிறோம்.

எங்கள் பெருமாட்டியை அன்பாக பராமரித்து, அவர் பிரிவால் துயருறும் பிரபா, யோகா குடும்பத்திற்கு எங்களுடைய அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**செல்வி. சுப்பிரமணியம் மங்களேஸ்வரி**
ஆத்தியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாவதானியின் மண்ணில் தோன்றிய சைவத்தமிழ் நாயகி

**பொ**ன்னம்மா அக்கா
ரீச்சர் என நாம்
அன்போடு அழைக்கிற
எம்மூரின்
சைவத்தமிழ்
அடையாளம்
மறைந்ததுவோ
இரத்தினசோதியாய்
வாழ்ந்த
இலட்சிய வாழ்வு
முடிந்ததுவோ
எப்படி மறப்பது
அவரை
அவர் காட்டிய
வழிகளை
என் நினைவுகள்
என் சிறுபராய
முன்பள்ளி
வாழ்வுக்கு
சென்று வருகின்றன
பூமா ரீச்சரிடம்
பொன்னம்மா அக்கா
வீட்டில்
நேசறியில்
நாம் படித்த
காலம் முதல்
எம்மோடு
பழகியவர்
எம்மை வழிப்படுத்தியவர்
பொன்னம்மா ரீச்சர்

சதாவதானியின்
பேச்சு மேடைகளை
சிறுவயதில் நாம்
அலங்கரித்த காலங்களில்
எம் பேச்சாற்றலை
தட்டிக் கொடுத்து
வழிப்படுத்திய ஆளுமை இவர்
அறுத்து உறுத்து
தமிழை ஆணித்தரமாய்
பேசும் அவர் பேச்சுக்கும்
நாம் அடிமை.

சதாவதானி பிறந்த மண்ணில்
பிறந்து அவர்
அடிச் சுவட்டில்
சைவத் தமிழ் ஆசிரியையாய்
அரும்பணிகள் செய்தவர்
பழந்தமிழ் இலக்கண
இலக்கியங்களில்
பாண்டித்தியம் மிக்க வித்தகி
வடஇந்து மகளிர்
கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை மிக்க
ஆசிரியர் பணிசெய்து
ஓய்வு கண்ட பின்பும்
ஓயாது தமிழுக்கும்
சைவத்துக்கும் சமூகத்துக்குமாய்
தன் ஊரில்
உழைத்தவர்
சதாவதானி
கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலையக்
காப்பாளராய்
பலரை வழிப்படுத்திய
ஆலோசகராய்
சதாவதானி
அறநெறிப் பாடசாலை
அதிபராய்
அவர் ஆற்றிய
பணிகள்
காலத்தால்
மறக்க முடியாதவை
பண்ணிசையாய்
பக்திப்பாக்களை
பாடுவதிலும்
வல்லவர் – ஊர்
ஆலயங்களில்
பண்ணிசை பஜனை
திருவாசக முற்றோதல் என
இறுதிவரை தன் வாழ்வை
சைவத் தமிழிற்காய்
அர்ப்பணித்த ஊர்
கண்ட சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி இவர்
இளவயதில்
கணவனை இழந்து
தனித்து வாழ்ந்தாலும்
பெண்களாலும்
முடியும் என்பதை
சாதித்துக் காட்டிய
சாதனை நாயகி இவர்
அடிக்கடி
எமக்கு ஏற்படும்
சந்தேகங்களை
தீர்த்து வைத்த
சைவத்தமிழ்க் களஞ்சியம் அவர்
சிதம்பரநாதன் கடையருகே
அவர் வீடு
எப்போதும்
எவருக்காகவும்
திறந்திருக்கும்
இறுதிக் காலங்களில்
நோய்நிலை கண்டு தன்
உறுதி குலைந்து போனார்
எம்மை வழிகாட்டி
வளர்த்து விட்ட தாயே
விடை தந்தோம் உங்களுக்கு
நீங்கள் காட்டிய வழியில்
சைவத் தமிழுக்கான
எங்கள் பயணமும்
உங்கள் அடிச்சுவட்டில்...
ஓம் சாந்தி!

எங்கள் மூத்த வழிகாட்டியை இழந்த
பிரிவுத்துயருடன்..உங்கள் மாணவன்
**வேல் நந்தகுமார்**
(விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாவதானி சி.க.கூ.சங்க வெள்ளிவிழா மலரில் இருந்து அமரர் பொன்னம்மா இரத்தினசோதி எழுதிய கட்டுரை

# சதாவதானி கதிரைவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலை



சதாவதானி சி.க.கூ சங்க ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டு சங்க பணிமனையிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கும் சதாவதானி கதிரைவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலை தொடர்பாகச் சில கருத்துக்களைச் சங்க வெள்ளி விழா மலரில் வெளியிடுவது பொருத்தமானதாகும். அத்துடன் பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.

பல காலமாக இவ்வூர் பெரியார்கள் சிலரின் எண்ணத்தில் உருவாகிக் கொண்டிருந்த அறநெறிப் பாடசாலை சங்க நிர்வாகத்தின் ஊக்குவிப்பு, மற்றும் ஒத்துழைப்பினால் 04.02.2005 ம் ஆண்டு வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

சங்கத் தலைவர் சோ.கங்காதரன் தலமையில் நடைபெற்ற விழாவில் பூசை, இறைவணக்கம், மங்களவிளக்கேற்றல் என்பவற்றை தொடர்ந்து தலமையுரை மற்றும் விருந்தினர் உரை இடம்பெற்றன.

அறநெறி பாடசாலை வகுப்புக்கள் 06.02.2005 ஞாயிற்றுக்கிழமை தொடங்கப் பெற்று ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்று வந்தன. வகுப்புக்கள் காலை 9மணி தொடக்கம் பகல் 12 மணி வரை நடைபெற்று வந்தன. தற்போது மாணவர்களின் வசதி கருதி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 3மணி தொடக்கம் 6மணி வரை நடைபெற்று வருகிறது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறநெறி பாடசாலைகளுக்கென வகுக்கபட்ட பாடத்திட்டத்திற்கமைய பாடங்கள் போதிக்கபடுகின்றன. அரசாங்கப் பாடசாலைப் பாடத்திட்டத்திற்குத் துணையாக அமையுமாறு அறநெறிப் பாடசாலையில் சைவசமய பாடம் கற்பிக்கப்படுகிறது.

உலகில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பது மாறாத நியதி ஆகும். விஞ்ஞான முன்னேற்றத்தால் ஏற்படும் மாற்றங்கள் மனித மனத்தை பரபரப்புக்கும் வேகத்துக்கும் ஆளாக்குகின்றன. இதனால் மனிதன் நல்லெண்ணங்களையும் உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளையும் இழக்க வேண்டி நேரிடுகிறது. இதற்கு மாறாக தன்னலம், போட்டி, பொறாமை, பதவிமோகம் பகை என்பன போன்ற தீய சக்திகளுக்கு மனிதன் ஆளாகின்றான். ஒற்றுமை அமைதி என்பவற்றை இழக்கின்றான். எனவே இளமையிலேயே மனித மனங்களை பயன்படுத்த செய்கின்ற சமயக் கல்வி பிள்ளைகளுக்கு அவசியமாகின்றது.

"எமது நாட்டிலே, கல்வியமைச்சு சமய பாடத்தைக் கட்டாய பாடமாக்கி யுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தத்தம் சமய நெறிகளை பற்றிய அடிப்படை அறிவை பெற்றுக் கொள்கின்றனர். ஆயினும் சமய பாடமும் ஏனைய பாடங்களைப் போல், அறிவையும் பரீட்சையையும் குறிக்கோளாகக் கொண்டே போதிக்கப்படுகிறது. இதன் விளைவாக பிள்ளைகளின் மனநிலையிலோ அல்லது வாழ்விலோ சமயம் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும், குறிப்பாக இன்று எமது நாட்டில் இளைஞர் மத்தியில் காணப்படும் முரண்பாடான சிந்தனைகளுக்கு இதுவே ஒரு காரணம் என்றும் 1990 ம் ஆண்டு வெளியான இளைஞர் ஆணைக்குழு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது." இக் கருத்துக்களால் அறநெறிபாடசாலையின் அவசியத்தை உணர்ந்தே கதிரைவேற்பிள்ளை பிறந்த தம்பசெட்டியில் அவர் பெயரால் அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கபட்டது. சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி.க.கூ.சங்கத்தின் ஆதரவுடன் சங்க பணிமனையில் பாடசாலை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 63 மாணவர்களுடன் பாடசாலை ஆரம்பிக்கபட்டது எமது பெற்றோரின் ஆர்வத்தை புலப்படுத்துகிறது.

பாடசாலைக்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவரும் , சதாவதானி முன்பள்ளி ஆசிரியர் ஒருவரும் இணைந்து பாடசாலையைக் கருத்துடன் நடாத்தி வருகின்றனர். உதவிக்குத் தற்காலிகமாக படித்த பெண்கள் இணைத்துக் கொள்ளபடுவார்கள். பாடசாலையில் சேவை செய்ய வருபவர்களுக்கு மேற்கல்வி வாய்ப்போ, நிரந்தர வேலை வாய்ப்போ அல்லது திருமணமோ வாய்க்கப் பெற்று சேவையிலிருந்து விலக வேண்டி நேரிடும். ஆனாலும் போட்டிகள் விழாக்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போது வந்து தமது ஒத்துழைப்பை நல்கி உதவி செய்வார்கள். பாடக் கற்பித்தலோடு பண்ணிசை பயிற்சியும் வகுப்பு நேரங்களில் இடம்பெறுகின்றது. சங்கீதம், நடனம், என்பவற்றோடு மிருதங்க வகுப்புக்களும் நடைபெற்றன. அவற்றை தொடர்ந்து நடத்த முடியாத நிலமை ஏற்படுகின்ற போதும் அவற்றை ஒழுங்காக நடாத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில், ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாக மாணவர்கள் பங்கு பற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். 2010ம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் எமது பாடசாலை மாணவன் செல்வன் இ.லோஜிதன் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டான். 17.11.2010 ம் தினத்தில் கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டான்.

திணைக்களத்தால் நடாத்தப்படும் சேக்கிழார் விழா போட்டி நாவலர் குரு பூசை தினப் போட்டி என்பவற்றிலும் பங்குபற்றிப் பரிசில் பெற்றுள்ளனர். குறிப்பாக 05.12.2011ம் ஆண்டு நடைபெற்ற நாவலர் குருபூசை தினப் போட்டியில் இ.லோஜிதன், சு.சுலக்சன் ஆகிய இரு மாணவர்கள் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றுள்ளனர்.

ஆண்டு தோறும் தைப்பொங்கல் விழா, கலைமகள் விழா என்பனவும் பாடசாலையில் கொண்டாடப்படுகின்றன. 2007ம் ஆண்டு இந்து கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் தைப்பொங்கல் விழா வடமராட்சி அபிவிருத்தி அலுவலர் திருமதி மாலதி ராகவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கலைமகள் விழா நிகழ்ச்சிகளும் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது. மாணவர்களிடையே பண்ணிசை, மனனம், பேச்சு, மாலைகட்டல், கோலம்போடல் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் கலைமகள் விழாவில் வழங்கப்படும். பெரியோர்களின் சொற்பொழிவுகளும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. பெற்றோரும் ஊர்மக்களும் விழாவில் கலந்து சிறப்பிப்பர்.

இவ்விழாக்களை நடாத்துவதற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சி.க.கூ சங்கமே பொருளாதார மற்றும் செயற்பாட்டு உதவிகளையும் வழங்கி பாடசாலைக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் வழங்கி வருகிறது. இச்சந்தர்ப்பத்தில் அறநெறி பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் தமது நன்றியறிதலைச் சங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றனர் என்பதை சிறப்பாக குறிப்பிடல் வேண்டும்.

**திருமதி.பொன்னம்மா இரத்தினசோதி**

**பொறுப்பாசிரியை,**

**அறநெறிப் பாடசாலை சதாவதானி கதிரைவேற்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கள்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ(து) இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல் லாதோ
எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
　　வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
　　கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
　　கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
　　எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
　　போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
　　ஞானமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
　　சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
　　ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
　　நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
　　வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
　　வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
　　ஏனோர்க்குந் தங்கோனைப் பாடலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
　　உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
　　தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்ன துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
மன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய் 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
        கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
        செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
        ஐயாநீ ஆ கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
        எய்யாமாற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
        தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
        காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
        ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
        ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
        அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
        எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
        சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
        பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
        கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
        வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரோருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடே லோ ரெம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாப் மழையேலோ ரெம்பாவாய் 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனே
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோரெம்பாவாய் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்வாய்ந் தாடேலோரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்(கு) அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்(கு)இப் பரிசே எமக்கெங்கோன் நலகுதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் 20

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தலைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்ல
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்தும் மண்நிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இல்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆறா அமுதே அளவிலாப் பொம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...



பிறப்பு - 1940.03.14 இறப்பு - 2023.12.16

அமரர்

பொ. இரத்தினசோதி

( பொன்னம்மா ரீச்சர் )

சதாவதானி அறநெறி பாடசாலை ஸ்தாபகரே

அறக்கல்வியாம் தமிழும் சைவமும்

செழித்துடனே சேவை செய்தீர்

உங்கள் புகழ் மங்காது

மறைந்தாலும் எம் நினைவில் நீங்காது

நெஞ்சமெல்லாம் நிறைந்த

பொன்னம்மா ஆசானே

புகழ் பூத்த பெண்மணியே

உங்கள் மறைவால்

எங்கள் நெஞ்சம் கனக்கிறது

துயருடன்

ஆத்ம சாந்தியடைய இறையருள்

வேண்டி நிற்கின்றோம்

[illegible]

சதாவதானி அறநெறிப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்ப விளக்காய் ஒளிர்ந்து இறையடி சேர்ந்த
எமது அன்புத்தெய்வம்

## அமரர் பொன்னம்மா இரத்தினசோதி

அவர்களின் துயரச்செய்தி அறிந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும், இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் வெளியிட்டோருக்கும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோருக்கும், மற்றும் இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியையில் கலந்து கொண்டு பிரார்த்தித்தோருக்கும், கிரியைகளை திறம்பட நடாத்திய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் , இம்மலரை குறுகிய காலத்தில் அச்சுப் பதிவு தந்த **SPM** பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினருக்கும், மேலும் பல உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கதிரவேற்பிள்ளை வீதி,**
**தம்பசிட்டி,**
**பருத்தித்துறை.**



**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழித் தோன்றல்

*** கதிரவேல்**
+
*** தெய்வானை**

→ ஆறுமுகம் + பொன்னம்மா
* *
→ சுப்பிரமணியம் + வள்ளிப்பிள்ளை
* *
→ கணபதிப்பிள்ளை
*

*** முருகப்பர்**
+
*** சின்னத்தங்கம்**

பாறுபதிப்பிள்ளை ←
*
முருகேசு + சிவகாமிப்பிள்ளை ←
* *
பொன்னம்மா + அருணாசலம் ←
* *
செல்லம்மா + ஆறுமுகம் ←
* *
அன்னம்மா + சிவபாதம் ←
* *
இராசம்மா + சோமசேகரம் ←
* *

கணபதிப்பிள்ளை + பாறுபதிப்பிள்ளை ↓

* தங்கம்மா

**பொன்னம்மா**
+
இரத்தினசோதி

*** - அமரர்**


பாறுபதிப்பிள்ளை


தங்கம்மா


பொன்னம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதையின் வரிகள்....

தன்னை அறிந்தவன் ஆசைப்படமாட்டான்
உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான்
துன்பதைக் கண்டு துவண்டுவிடாமல்
இன்பத்தைத் தேடி அலையாமல்
பற்று , பயம், கோபம் இன்றி
உறுதியான உள்ளத்தோடு இறுதிவரை இரு!

சோம்பலும் செயலிழந்த நிலையும் கோழைகளுக்கு உரியது
அவை உனக்கு வேண்டாம்
ஓடி ஒளிந்து கொள்வது பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது
எதையும் முனைப்போடு எதிர்கொள்
உலகை தலைகீழாக மாற்றும் சக்தி உனக்குண்டு
அதை வெளிக்கொண்டு வா
செயலில் இறங்கி ஆபத்தைக் குறைக்கும் சக்தி உனக்குண்டு
எனவே எழுந்து நில்.

கடமையிலிருந்து நழுவுகின்றவன்
அனைத்தையும் இழக்கின்றான்
பொறுப்புக்கள் கொடுக்கப்படுவதில்லை
எடுக்கப்படவேண்டும்.



-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org